**இணைப்பு – I**

**திருக்கோவில் கல்வி வலயத்திற்கு உட்பட்ட வகை III பாடசாலைகளுக்கான உரிய தரத்திலான அதிபர் வெற்றிடம் நிரப்புவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் புள்ளித் திட்டம்**

**1. <u>சேவை மூப்பு/ முதுநிலை.</u>** **30 - புள்ளிகள்**

இலங்கை அதிபர் சேவையின் I ஆம் தரத்திற்கு பதவியுயர்வு பெற்ற திகதியில் இருந்து ஒரு வருடத்திற்காக வழங்கப்படும் புள்ளியின் அளவு, அரச பொதுச்சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 1/2019 ஆம் படி I ஆம் தரத்திலே அதிக காலம் சேவையாற்றிய மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு சேவைமூப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளும் வழங்கப்படும், ஏனைய அதிகாரிகளுக்கு விகிதாசாரமான அடிப்படையில் மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்திற்காகவும், புள்ளி கிடைக்கும் வகையில் புள்ளி வழங்கப்படும்.

மேலும், ஒழுக்காற்று நடவடிக்கைக்காக அல்லது சம்பளமற்ற விடுமுறைக்காக அல்லது திருப்திகரமான சேவைக் காலத்தை இழந்த உத்தியோகத்தர்களுக்கு மட்டும் அக் காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(12 மாத சேவை காலத்திற்காக மட்டும் ஒரு வருடத்திற்குரிய மொத்தப் புள்ளித்தொகையும் உரித்தாவதுடன், 12 மாதத்திற்குக் குறைந்த மற்றும் 06 மாதத்திற்குக் கூடிய சேவைக்காலத்திற்காக ஒரு வருடத்திற்கு கிடைக்கக்கூடிய மொத்தப் புள்ளின் தொகையில் அரைவாசி உரித்துடையதாகும் (06 மாதங்களுக்கு குறைந்த காலத்திற்காக புள்ளிகள் உரித்துடையதன்று)

விண்ணப்பங்கள் கோரப்படும் பாடசாலைகளுக்கு தரம் I இற்கான அதிபர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் தரம் II இற்கான அதிபர்களும் தரம் I/II இற்கான அதிபர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் தரம் III இற்கான அதிபர்களும் விண்ணப்பிக்கும் போது புள்ளிகள் மேல் குறித்தவாறு வழங்கப்படும்.

**2. <u>பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவம்</u>** **20 - புள்ளிகள்**

2.1 இலங்கை அதிபர் சேவைக்கான நியமனக்கடிதம், சேவைப்பிரமாணக் குறிப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப நியமன அதிகாரம் பெற்றவரினால் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினால் அல்லது மாகாண கல்விச் செயலாளரினால் வழங்கப்பட்டிருக்க வேண்டும்

2.1.1 1AB வகை பாடசாலையில் நிரந்தர அதிபராக கடமையாற்றியிருப்பின் முழுமையான ஒரு வருடத்திற்கு - 4 புள்ளிகள்

2.1.2 1C வகைப் பாடசாலையில் நிரந்தர அதிபராக கடமையாற்றியிருப்பின் முழுமையான ஒரு வருடத்திற்கு - 3 புள்ளிகள்

2.1.3 வகை - II பாடசாலையில் நிரந்தர அதிபராக கடமையாற்றியிருப்பின் முழுமையான ஒரு வருடத்திற்கு - 2 புள்ளிகள்

2.1.4 வகை - III பாடசாலையில் நிரந்தர அதிபராக கடமையாற்றியிருப்பின் முழுமையான ஒரு வருடத்திற்கு - 1 புள்ளி

2.2 பிரதி அதிபர்

2.2.1 1AB வகைப் பாடசாலையில் நிரந்தர பிரதி அதிபராக கடமையாற்றியிருப்பின் முழுமையான ஒரு வருடத்திற்கு - 2 புள்ளிகள்

2.2.2 1C வகைப் பாடசாலையில் நிரந்தர பிரதி அதிபராக கடமையாற்றியிருப்பின் முழுமையான ஒரு வருடத்திற்கு - 1 புள்ளி

**குறிப்பு**

I. 12 மாத சேவைக் காலத்திற்காக மட்டும் வருடத்திற்கு உரித்தான முழுப் புள்ளியும் உரித்தாவதுடன் அதனை விட குறைந்த காலத்திற்காக புள்ளிகள் உரித்தாவதில்லை. மேலும் கிழக்கு மாகாண அரச சேவைக்கான தாபன நடைமுறை ஒழுங்கு விதிக்கோவையின் அத்தியாயம் IX பிரிவு 107 இற்கமைவாக யாதேனுமொரு பதவிக்கு பதில் கடமை புரிய, அல்லது அதற்குரிய கடமைகளை கவனிப்பதற்காக நியமிக்கப்படுவதனால் அப்பதவிக்கான உத்தியோகத்தருக்கு அத்தகைய பதவியின் பொருட்டு விசேட உரித்தோ அல்லது சேவைப்பிரமாணம் மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின்கீழ் விசேட சலுகையினையோ, விசேட புள்ளிகள் வழங்குவதற்கான உரிமையோ கோரமுடியாது.

a

II. மேலும் இவ்இணைப்பில் இல -2.1 மற்றும் இல- 2.2 இற்கு ஏற்ப பாடசாலை நியமனம் அல்லது இடமாற்றக் கடிதம் வழங்கும் போது பாடசாலை வகைப்படுத்தலின்படி குறித்த பாடசாலையின் வகையாக 1AB,1C அல்லது II பாடசாலையாக இருந்தமை பற்றி உரிய நியமன அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியினால் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டு கையொப்பம் இடப்பட்டுள்ளதனை எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**3. <u>மேலதிக கல்வித் தகைமைகள்</u>** **10 - புள்ளிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பதிவு செய்யப்பட்ட பல்கலைக்கழகத்தின் / நிறுவனத்தின் பெற்றுக்கொண்டுள்ள தகைமைகளுக்குக்காக மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்

**ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு அல்லது வினைத்திறன் தடைதாண்டல் என்பவற்றுக்கு அடிப்படை தகுதியாக கருதப்பட்ட கல்வித் தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.**

(பெற்றுக் கொண்டுள்ள உயர் கல்வி தகைமைகளுக்கு புள்ளிகள் கிடைக்கும் வகையில் ஒரு சான்றிதழுக்கு மட்டும் புள்ளி வழங்கப்படும்)

3.1 கல்வி மற்றும் முகாமைத்துவம் சம்மந்தமான முதுகலைப்பட்டம் அல்லது அதற்கும் உயர்ந்த தகைமைக்காக — புள்ளிகள் 10
3.2 ஆரம்ப பட்டம் (அடிப்படைப் பட்டம்) — புள்ளிகள் 07
3.3 கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் கல்வி டிப்ளோமா — புள்ளிகள் 06
3.4 பட்டப்பின் கல்வி டிப்ளோமா — புள்ளிகள் 04
3.5 பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமா (ஒரு வருடம்) — புள்ளிகள் 03

**4. <u>வருடாந்த செயற்திறன் மதிப்பீடு</u>** **15 - புள்ளிகள்**

நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதிக்கு முன்னராக அண்மைய 05 வருட காலப்பகுதிக்குள் வருடாந்த செயல்திறன் மதிப்பீட்டின் போது பெற்றுக்கொண்ட மதிப்பீட்டிற்கு கீழ் குறிப்பிடப்பட்டவாறு புள்ளிகள் வழங்கப்படும்.

இதற்கமைய நேர்முகப்பரீட்சை நடைபெறும் திகதிக்கு முன்னரான 05 வருட காலப் பகுதிக்குரிய செயலாற்றுகை தரங்கணிப்பிட்டு அறிக்கையினை உறுதிப்படுத்தி உரியவாறு ( மிக நன்று, சராசரிக்கு மேல், சராசரி, திருப்தியின்மை) தரங்கணிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

| **செயற்திறன் மதிப்பீட்டின்போது பெற்றுக்கொண்ட மதிப்பீடு** | **ஒருவருடத்திற்கு வழங்கப்படும் அதிக பட்ச புள்ளி** |
|---|---|
| மிக நன்று | 03 |
| சராசரிக்கு மேல் | 02 |
| சராசரி | 01 |
| திருப்தியின்மை | 00 |

**<u>குறிப்பு</u>**

செயல்திறன் மதிப்பீட்டின் போது மேலே குறிப்பிடப்பட்ட தெளிவான ஒருதேர்வு இருந்தால் மாத்திரம் புள்ளி வழங்கப்படுவதுடன் தேர்வுகள் பல இருந்தால் அல்லது எதுவிதமான தேர்வுகளும் அடையாளப்படுத்தப்படவில்லை எனின் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**5. <u>ஆங்கில மொழிப் புலமை</u>** **02 - புள்ளிகள்**

நேர்முகத்தேர்வில் வாய்மொழி மூலமான தொடர்பாடல் திறன் பரிசீலிக்கப்படும்.

**6. <u>கணனி கல்வி தொடர்பான அறிவு</u>** **03 - புள்ளிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது மூன்றாம் நிலைக் கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவின்கீழ் (TVEC) பதிவுசெய்யப்பட்ட நிறுவனத்தினால் பெற்றுக்கொண்ட தகவல் தொழில்நுட்ப பயிற்சி சான்றிதழ் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். (ஒரு சான்றிதழுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்)

6.1 பயிற்சிப் பாடநெறிக் காலம் 01 - 03 மாதம் வரை எனின் அச்சான்றிதழிற்கு — 01 - புள்ளிகள்
6.2 பயிற்சிப் பாடநெறிக் காலம் 03 – 06 மாதம் வரை எனின் அச்சான்றிதழிற்கு — 02 - புள்ளிகள்
6.3 பயிற்சிப் பாடநெறிக் காலம் 06 மாதத்திற்கும் அதிகமெனின் அச்சான்றிதழிற்கு — 03 - புள்ளிகள்

## 7. <u>மெய்ச்சுரைகள்</u> 03 - புள்ளிகள்

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மூலம் பொது 230 பீ (பாராட்டுகள் மற்றும் கண்டனங்கள்) எனும் படிவத்தின்படி முறையாக வழங்கப்பட்ட சேவை மெய்ச்சுரைக்காக மாத்திரம் ஒன்றுக்கு ஒரு புள்ளி வீதம் அதிகபட்ச சேவை மெய்ச்சுரைக்காக 03 புள்ளிகள் வழங்கப்படும்.

## 8. <u>கல்வி தொடர்பான ஆராய்ச்சி மற்றும் வெளியீடு</u> 05 - புள்ளிகள்

**தனிப்பட்ட ஆக்கமாக** வெளியிடப்பட்ட கல்வி தொடர்பான புத்தகங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் செய்தித்தாள் கட்டுரைகளுக்கு மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.

### 8.1 புத்தக வெளியீடு : 02 புள்ளிகள

- உரிய அதிகாரியிடமிருந்து முறையான அனுமதியினைப் பெற்றறு புத்தகம் வெளியிட்டிருத்தல் வேண்டும்.

- தேசிய நூலக மற்றும் ஆவணமாக்கல் சபையின்கீழ் (NLDSB) பதிவு செய்யப்பட்ட வெளியீட்டாளர்/ அச்சுப் பதிப்பாளரால் வெளியிடப்பட்ட புத்தகம், அவ்வாறு இல்லாவிட்டால் அப்புத்தகத்தின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் அதனை ஒரு வெளியீடாக ஏற்றுக்கொள்வதா இல்லையா என்பது தொடர்பாக நேர்முகப்பரீட்சை சபையினால் முடிவு செய்யப்படும்.

குறித்த புத்தகமானது நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

- பாடப்புத்தகங்கள், அரச சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், கையேடுகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட வெளியீடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

### 8.2 ஆராய்ச்சிக் கட்டுரைகள் - 02 புள்ளிகள்

1. பல்கலைகழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.
2. அமைச்சினால் வெளியிடப்பட்ட சஞ்சிகைகள் அல்லது காலாண்டு இதழ்களில் வெளியிடப்பட்டிருத்தல்
3. அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச சஞ்சிகைகள் அல்லது காலாண்டு இதழ்களில் வெளியிடப்பட்டிருத்தல்

சஞ்சிகைகள் அல்லது காலாண்டு இதழ்களில் அங்கீகரிக்கப்பட்டதா என்பதனை உறுதி செய்வதற்காக, நேர்முகப் பரீட்சைசபை Google Scholar,JSTOR,ERIC,Education Research Complete , Academic Search Premier போன்ற கல்வி தேடு பொறிகள், நூலக தரவுத் தளங்கள் மற்றும் உயர்தர ஆய்வுகளை வெளியிடும் பிரபலமான வலைத்தளங்களை பயன்படுத்தும்.

ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிடப்பட்டமைக்கான ஆதாரங்கள் (சான்றிதழ்கள் அல்லது சஞ்சிகைகள் அல்லது எண்குறியீட்டு பொருள் அடையாள எண் (Digital Object Identifier) அதிகாரப்பூர்வ இணைய முகவரி என்பவற்றை நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும் பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரையின் பிரதி ஒன்றினையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**8.3 செய்தித்தாள் கட்டுரைகள் - 02 புள்ளிகள்**

தேசிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் கட்டுரைகளாக இருத்தல் வேண்டும்.

உதாரணம் - வீரகேசரி, தினகரன், Sunday Observer, தினமின etc.

குறித்த செய்தித்தாள் பிரசுரிக்கப்பட்டமைக்கான ஆதாரத்தினை (செய்தித்தாள் பிரசுரிக்கப்படும் பக்கத்தில்) நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட செய்தித்தாள் கட்டுரையொன்றின் பிரதியினையும் நேர்முகப் பரீட்சை சபையிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**9. நடத்தை திறன்கள்**

கல்வித்துறையிலே புதிய போக்குகள், தற்போதய கல்வி கொள்கை, கல்வி மறுசீரமைப்பு மற்றும் 21 ஆம் நூற்றாண்டு கல்வித் துறையில் உள்ள சவால்கள் தொடர்பாக கவனத்தை செலுத்தி அதிபராக எதிர்காலத்திலே நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்கின்ற அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாக தனது நடைமுறை பிரயோக அனுபவமும் உட்படுத்திய 05 நிமிட வாய்மொழி மூல முன்வைப்பு மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் தங்களது Power Point Presentation வன் பிரதியானது நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதற்காக கீழ் குறிப்பிடப்படும் விடயங்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 | விடய அறிவு | **புள்ளி 02** |
| 2 | விடயத் தெளிவு மற்றும் தொனி | **புள்ளி 02** |
| 3 | முன்வைப்புக்குரிய விடயத்துடன் தொடர்புடைய உபகரணப் பாவனை | **புள்ளி 02** |
| 4 | நேர முகாமைத்துவம் | **புள்ளி 1.5** |
| 5 | முன்வைப்பு பற்றிய வினா விடைப் பகுதி | **புள்ளி 2.5** |

**10 நேர்முகப்பரீட்சையின் போது வெளிப்படுத்தப்படும் திறன்கள் 02 புள்ளிகள்**

நேர்முகப்பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறன்கள், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறன்களுக்காக புள்ளிகள் வழங்கப்படும்.

**மொத்தப்புள்ளிகள் - 100**